பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 12 (25—6—68) செவ்வாய் ★ வெளியூர்: ஆனி 13 (26—6—68) புதன் [இதழ்: 9

காங்கிரசார் இரட்டை வேடம்

அம்பலப்படுத்துகிறார் அமைச்சர் கே. ஏ. மதியழகன்

கொள்முதல் விலையேற்றக் கூப்பாட்டுக்குப் பதில்

பக்தவத்சலம் புகாரை மறுத்து அறைகூவல்

மதுரை, ஜூன் 24

"விவசாயிகளிடம் தங்களுக்கு அக்கறை இருப்பதாகக் காங்கிரசுக்காரர்கள் காட்டிக்கொள்வது வெறும் கண் துடைப்புதான்!

"தமிழக அரசு ஏற்கனவே விவசாயிகளுக்கு நியாயமான கொள்முதல் விலை அளித்துவருகிறது. மேலும் கொள் முதல் விலை, சம்பந்தமாக மத்திய அரசு செய்துள்ள சிபாரிசுகளைப் பின்பற்றித்தான் தமிழக அரசின் கொள் முதல் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

"விவசாயிகளின் நலன்களையும், பொதுமக்களின் நலன்களையும் கருத்தில் கொண்டுதான் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

"விலைவாசியை ஒருநிலைப்படுத்துவதே முதல் முக்கியத்துவம் வாய்ந்தது. விவசாய விளைபொருள்களின் விலைகளைத் திடீரென உயர்த்துவது பொருளாதாரத்துக்குப் பெருங்கேடு விளைவிக்கும். ஆகவே, விவசாயிகளின் நலன்களுக்கும், பொதுமக்களின் நலன்களுக்கும் குந்தகம் ஏற்பட்டுவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

"மலிவு விலை அரிசி வழங்குவதில் நகர மக்களுக்கும்—கிராம மக்களுக்கும் இடையே தி. மு. கழக அரசு வேறுபாடு காட்டுவதாகக் காங்கிரசுக்காரர்கள் சொல்லும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது; 'மாநிலத்தின் வளர்ச்சிக்குச் செலவிடவேண்டிய பணத்தை அரிசிக்காகச் செலவிடுகிறது அரசு' என்ற குற்றச்சாட்டும் ஆதாரமற்றது!

"கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்றும், அதேநேரத்தில் படியரிசித் திட்டத்தை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்த வேண்டுமென்றும் காங்கிரசுக்காரர்கள் கூறுவது, ஒன்றுக்கொன்று முரணான வாதம்; இது, இரட்டை வேடமாகும்"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், காங்கிரசாரின் பொய்ப் பிரசாரத்தை மறுத்துக் கூறுகையில் குறிப்பிட்டார்.

இங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் மேலும் அவர் கூறியதாவது:—

"கொள்முதல் விலையை உயர்த்தினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையை அரசு உயர்த்த நேரிடும்; அதனால் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும்.

நகர மக்களுக்கு ரூபாய்க்கு படி அரிசி கொடுப்பதால் மாநில அரசுக்கு ஆண்டுக்கு எட்டு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாகக் கூறுவது தவறு. மலிவு [illegible]சிக்காகும் செலவை [illegible] ஆண்டு கூடுதலாக [illegible]லிக்கப்பட்ட வசூலாகா[illegible]லி[illegible]ந்த வரித்தொகை மூலம் கிடைத்த 9 கோடி ரூபாயைக் கொண்டு சரிக்கட்டப்பட்டிருக்கிறது.

'ஆந்திர அரசு, கொள்முதலுக்கான விலையை உயர்த்தியிருப்பதாகத் தமிழ் நாடு காங்கிரசுத் தலைவர்கள் அறிக்கை விடுகிறார்கள்; ஆனால் ஆந்திர முதலமைச்சரும், உணவு அமைச்சரும், கொள்முதல் விலை விஷயத்தில் என் வழியைப் பின்பற்[illegible] யிருக்கிறார்கள். [illegible] விலையை [illegible] நிர்ணயிக்[illegible]

விவசாயப் [illegible] அதிக வி[illegible] திட்டக்குழுத் [illegible] எதிர்த்திருக்கிறா[illegible] அதிகம் கொடுப்பதால் அதற்குகேற்ப வாங்குவோர் கொடுக்கும் விலையையும உயர்த்த அனுமதிக்கவேண்டும்: இப்படிச் செய்தால் பணவீக்கம் ஏற்படும்' என்பது காட்கில் கருத்தாகும்; இக்கருத்தை, அலட்சியப்படுத்துவதற்கில்லை.

ஆந்திரத்தில் அதிகக் கொள்முதல் விலை தரபபடுவதாகக் கூறுகிறார்கள்.

ஆந்திரத்தில் உள்ள நிலைமை வேறு—தமிழ் நாட்டிலுள்ள நிலைமை வேறு. பெரும்பாலும் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்காகவே ஆந்திரத்தில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால் தமிழ் நாட்டில் கொள்முதல் செய்யப்படும் அரிசி தமிழ் நாட்டிற்குள்ளேயே பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

கொள்முதல் விலையை உயர்த்தினால் பொதுமக்களுக்கு விநியோக விலையையும் உயர்த்த வேண்டியிருக்கும்; இதை சுப்பிரமணியம் விரும்புகிறாரா?

காங்கிரசு ஆளும் மாநிலத்தில் சட்டம்—ஒழுங்கு படும்பாடு!

காவல் நிலையத்திலேயே திருடர்கள் கைவரிசை

துப்பாக்கிகள்—சீருடைகள் மறைந்த மாயம்

பெங்களூர், ஜூன் 24—

கருநாடக மாநிலத்தில் குல்பர்கா என்னுமிடத்தில் அப்சல்பூர் காவல் நிலையத்தில் மூன்று துப்பாக்கிகளும், சீருடைகள் சிலவும் காவற் பணியாளர்களின் அறைகளிலிருந்து இரண்டு நாட்களுக்கு முன் களவாடப்பட்டிருப்பதாகக் காவல்துறை தலைமை அலுவலகத்திற்குப் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

காவற் பணிகளில் ஈடுபட்டிருந்த நான்கு காவலர்கள், அதிகாலையில் அறைகள் உடைக்கப்பட்டுக் களவாடப்பட்டிருப்பதைக் கண்டனர். உயர்தரப் போலீசு அதிகாரிகள் இச்சம்பவத்தைப்பற்றி விசாரணை நடத்திவருகின்றனர்.

மதுவிலக்கில் கழக ஆட்சியின் உறுதி

மனந்திறந்து பாராட்டுகிறார் மொரார்ஜி

தமிழகத்தை எடுத்துக்காட்டி சொந்தக் கட்சி ஆட்சிக்கு இடித்துரை

ஐதராபாத், ஜூன் 24—

தமிழகத்துக்கு வந்து கழக ஆட்சிமீது தமக்கும் தமது கட்சிக்கும் உள்ள காழ்ப்பை வெளிப்படுத்தி. தம்மால் முடிந்தவரையில் தாக்கிப் பேசிவிட்டுத் திரும்பிய துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் ஆந்திர மாநிலத்துக்குச் சென்றதும் புகழ்ந்திருக்கிறார் கழக ஆட்சியை!

காந்தியாரின் மதுவிலக்குத் திட்டத்துக்கு உலை வைத்துவரும் காங்கிரசு ஆளும் மாநிலமான ஆந்திரத்தில், தமது கட்சிக்காரரைத் தாக்காமல் தாக்க வேண்டும் என்பதற்காகத் தமிழகத்து ஆட்சியைப் பாராட்டியிருக்கிறார்.

கழக ஆட்சியை அவர் எவ்வளவு தாக்கினாலும், மதுவிலக்கைப் பொறுத தவரையில் அவர் எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்?

[illegible] எடுத்துக் [illegible]டக் தமது [illegible]ாநிலம் ஒன்று [illegible] இல்லையே [illegible]தோடு, மனம் [illegible]ாட்டியிருக்கிறார்—[illegible]ன் மதுவிலக்குக் [illegible]கையை!

ஐதராபாத்தில் சட்டமன்றக் காங்கிரசுக் கட்சிக் கூட்டத்தில் பேசிய திரு மொரார்ஜி தேசாய்,

'தமிழகத்தில் தி. மு. கழக அரசு மதுவிலக்குக் கொள்கையைத் தொடர்ந்து உறுதியாகச் செயல்படுத்தி வருவது காங்கிரசு ஆட்சிக்கு ஓர் அறைகூவலாகும்"

என்றார் அவர்.

ஒரு கடன் இருக்கையில் மற்றொரு கடன் இல்லையாம்!

வட்டிக்கடை 'பாஷை'யில் பேசுகிறார் மொரார்ஜி!

ஐதராபாத், ஜூன் 24—

"மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகள் வாங்கியுள்ள கடன் தொகைகளை உரிய காலத்தில் வட்டியுடன் திருப்பிச் செலுத்துவதில், மத்திய–மாநில அரசுகளுக்கிடையே உடன்பாடு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்"

என்று இந்தியத் துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய், தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"மாநிலங்களுக்குக் கடன்களை, மத்திய அரசு தாராளமாக வழங்குகிறது; இக்கடன்கள், மத்திய அரசின் பொருளாதார நிலைமைகளை ஒட்டியே வழங்கப்படுகின்றன.

"மாநிலங்கள் மத்திய அரசிடம் கடன்வாங்கும் கடன்களை உரிய நேரத்தில் வட்டியுடன் திருப்பித்தராவிட்டால், மீண்டும் மற்றொரு கடனை எப்படி மத்திய அரசு வழங்கமுடியும்?"

பஞ்சாபில் மற்றொரு சண்டிகார்!

புதிதாக உருவாக்க கில் அமைச்சரவை முயற்சி

லூதியானா, ஜூன் 25—

"தகராறுக்குரிய சண்டிகார் நகரை பஞ்சாப் மாநிலத்தில் சேர்க்காவிடில் சண்டிகார் நகரிலிருந்து மூன்று அல்லது நான்கு மைல் தொலைவில் சண்டிகார் நகருக்குள்ள தனித்தன்மையைப் போன்று புதிய நகர் ஒன்றை நிர்மாணிக்கப்போகிறோம்"

என்று பஞ்சாப் மாநிலக் கூட்டுறவுத்துறை அமைச்சர் இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

சண்டிகார் நகரை பஞ்சாப் மாநிலத்துடன் இணைக்கவேண்டும் என்று கில் அமைச்சரவையால் வற்புறுத்தப்பட்டு வருவதன் தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்டவாறு பஞ்சாப் மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் பேசினார்.

கழகத் தோழர் படுகொலை

காங்கிரசு ஆதரவாளர்களின் வெறிச் செயல்

"22—6—68 மாலை 5-மணியளவில் தஞ்சை வட்டம் திருவையாற்றுக்கு அருகிலுள்ள வைரவன்கோவில் தி. மு. கழகக் கிளையின் அவைத் தலைவர் திரு. நடேசன் அவர்களை, காங்கிரசுக் கட்சி அனுதாபிகள் இருவர் கத்தியால் குத்திக் கொலை செய்துவிட்டனர்"

என்ற செய்தி, தஞ்சை வட்ட தி. மு. க. செயலாளர் துரை வையாபுரி அவர்களால் தரப்படுகிறது. இதுபற்றி அவர் மேலும் தெரிவிப்பதாவது:—

"திரு. நடேசன் அவர்களும், அவரது உறவினர் தங்கையன் என்பவரும் விதை விடுவதற்கு ஆள் கூப்பிடுவதற்காக அருகிலுள்ள பெரமூர் கிராமத்திற்குச் சென்று திரும்பி வரும் வழியில் பெரமூர் அரிசனத் தெரு அருகில் சைக்கிளில் வரும்பொழுது, காங்கிரசு அனுதாபிகளான முத்தையன், வடிவேல் ஆகிய இருவரும் சைக்கிளை கீழே தள்ளிவிட்டு நடேசனைக் கத்தியால் குத்திக் கொன்றிருக்கின்றனர்.

"திரு. நடேசன் அவர்கள் கடந்த 10-ஆண்டுக் காலமாகக் கழகத்தில் உறுப்

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழகம் முழுவதிலும் தீப் பிடிக்காத வீடுகள்

குறைந்த செலவில் கட்டுவதற்கு நிபுணர்கள் திட்டம் தரவேண்டும்

முதலமைச்சர் அண்ணா வேண்டுகோள்

கிருஷ்ணா ஒடுகள் நன்கொடை வழங்கு விழாவில் அமைச்சர்கள் நெடுஞ்செழியன் மு.கருணாநிதி பேச்சு

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று சென்னை கிருஷ்ணா ஒடு தயாரிப்புத் தொழிற்சாலையினர், குடிசைவாழ் மக்களுக்குத் தீப்பற்று வீடுகள் கட்டித்தருவதற்காக நன்கொடையாக அளித்த ஒரு இலட்சம் ஒடுகளைப் பெற்றுக்கொண்டு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கும் வகையில் முதலமைச்சர் அண்ணா, தொழிலமைச்சர் இரா. நெடுஞ் செழியன், பொதுப்பணிமைச்சர் கருணாநிதி ஆகியோர் ஆற்றிய உரைகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

அண்ணா

"கிருஷ்ணா ஒடு உற்பத்திசாலை உரிமையாளர்கள், சென்னையில் குடிசைவாழ் மக்களின் துயர் துடைப்பதற்காகத் தீப் பற்றாத வீடுகளே கட்டித் தரத் தீர்மானித்துள்ள தமிழக அரசுக்கு உதவும் வகையில் ஒரு இலட்சம் ஒடுகளை அளிக்க முன்வந்தற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

இந்த உதவி அவர்களிடம் நாமு கக்கேட்டு அவர்கள் தர முன் வந்ததல்ல; இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கின்ற நான் எவரே வரிடம் — எந்தெந்த உதவியைப் பெறுவது என்று யோசித்தக் கொண்டிருக்கும் வேளையில், தீயடுனே இந்தத் தொழில நடத்திக் கொண்டிருக்கும் உரி மையாளர்கள் எனது இல்லத் தில் வந்து சந்தித்து, இந்த நல்ல காரியத்திற்கு ஒரு இலட்சம் ஒடுகளே வழங்கப்போவதாக அறிவித்தார்கள்; நான் இதைக் கேட்டு பெருமகிழ்ச்சியடைந் தேன்.

குடிசைவாழ் மக்கள் பீச்சங்கிணக்கு நல்லதோர் பரிகாரந்தேட நான் எண்ணிக்கொண்டிருந்த வேளை யில், தாமாக முன்வந்து உதவும் நல்ல உள்ளத்தை பாராட்டு கிறேன், தமிழக அரசின் சார் பில் அவர்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

சென்ற ஆண்டு குடிசைப் பகுதி களில் தீப்பிடித்தபோது அவர் களுக்கு நிவாரணமாக தீப்பிடிக் காத வீடுகளே கட்டித்தருவதற் காக நிதி வருவு துவக்கப்பட் டது; இதற்குத் தொழிலதிபர் கள்—தொழிலாளர்கள் — நடுத் தர மக்கள்—ஏழை எளிய மக் கள் ஆகிய அனைவரும் ஆதர வளித்து நிதி வருக்கப் பெருக் கினர்கள். இதிலிருந்து ஒரு பகுதியை எடுத்து முதற்கட் டமாக இதுவரை 1,400 வீடுகளை தமிழக அரசு கட்டித் தந்திருக் கிறது.

ஆனால் இது போதாது; இன்னும் பல வீடுகள் கட்டப்பட வேண்டி யிருக்கிறது. 'இன்னும் எத்தனை வீடுகள் கட்டினால் இந்தப் பிரச் சினை தீரும்' என்று கணக்குப் பார்த்தால் 'ஒரளத்து இன் னும் சுமார் பத்தாயிரம் வீடு களாவது கட்டித்தர வேண்டி யிருக்கும்' எனத் தெரிந்தது.

குடிசையிலே வாழ்கின்ற மக்கள், தங்களுக்கு வேண்டிய வீடுகளை தாங்களே கட்டிக்கொள்வது என்பது முடியாத காரியம்! அவர்களது குறைந்த வருவா யில் அன்றாடப் சிரமங்களுக் நீர்த்துக்கொண்டு மீதப்படுத்தி வீடுகளுக்கு கட்டுவது என்பது பலன் தராது.

ஆகவே, அரசாங்கமே தனது சொந்தப் பொறுப்பில் அவர் களுக்குத் தீப்பற்றாத வீடுகளே கட்டித்தர முன்வந்துள்ளது.

இங்கே மிகச் சிக்கலான முறை யில் கட்டப்பட்ட மாதிரி வீடு களைப் பார்த்தேன். இத்தகைய மலிவான வீடுகளைக் கட்டு வதற்கு நம் காட்டிலுள்ள எரு சீவியர்களும், கட்டிடக்கலே நிபு னர்களும் கலந்தாலோசித்து சிறந்தோர் திட்டத்தை உரு வாக்கவேண்டும்.

நான் இந்தத் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்தபோது, தொழில கத்தின் ஒவ்வொரு கட்டத்தினும் கடைபெற்றுவருகின்ற வேலே விவரங்கள்பற்றி இதன் உரிமை யாளர்கள் எடுகளுக்கு மிக எளி தாக விளக்கிக் கூறினர்கள். பெரும் முதலீடு செய்து தொழில் ஆரம்பித்துவிட்டால் மட்டும் போதாது; அந்தத் தொழில்பற் றிய முழு அறிவும் இருக்க வேண்டியது அவசியம்.

அண்மையில் ஜப்பான் நாட்டிற் குச் சென்றபோது நான் அங்கு எப்படிக் குடியிருப்புக் கட்டுகிறார் கள் என்பதைப் பார்த்தேன். இங்கே கட்டிடங்களைக் கட்டு வதுபோல் எல்லாவற்றிற்கும் சுவர் எழுப்புவதில்லை; சுற்றுச் சுவரை மட்டும் ஒற்றைச் சல் சுவராகத்தான் எழுப்புகிறார் கள்.

தனித் தனி அறைகளைக் கட்டுவ தற்கு அவர்கள் மெல்லிய தடு கிளையும், உறுதியான சாரித அட்டைகளையும் பயன்படுத்துவ தால், செலவு மிகக் குறைவாக இருக்கிறது.

அப்படிச் செலவு குறையுமென்ற மும், 'வீடு அழகாகவும் இருக் காது; மனமான காற்று அதற் தால் தங்காது' என்று சிலர் கூறலாம்.

ஜப்பானில் அடிக்கடி பூகம்பம் வருகிறது; அப்படிப் பூகம்ப மும், புயலும் மிகமிகக்கின்ற நாட்டிலேயே இத்தகைய முறை யில்தான் வீடுகளைக் கட்டுவதில் செலவைக் குறைத்திருக்கிறர் கள்.

ஆகவே, அத்தகைய முறையில் குறைந்த செலவில் வீடுகளைக் கட்டுவதற்குத் தொழில் நிபுணர் கள் முன்வரவேண்டும்.

உற்பத்தியாளர்களும் இந்த முறையில் செலவுகளைக் குறைப்பதற்கு யோசனைகளைக் கூறுவார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த வகையில், நாட்டிலுள்ள எஞ்சினியர்களும், கட்டிடக் கலை நிபுணர்களும் சிறந்த யோசனை களைக் கூறவேண்டும்—நல்ல திட்டங்களே உருவாக்கவேண்டும் என்பதை மீண்டும் கேட்டுக்கொள்ளு கிறேன்.

முன்பெல்லாம் மலிவான வீடுகள் என்றால் ஓலை வீடுகளேதான் கூறுவார்கள்; ஆனால் இன்று அதே முறையில் வசதியான வகையில் தீப்பிடிக்காத பாது காப்பான வீடுகள் தேவைப்படு கிறது.

காட்டிலே இன்று வசமைத்தான் அதிகமாகிவருவதால், தங்களுக் குள் ஏற்படுகின்ற அசியல் வி ரோ தத்தைத் தீர்த்துக் கொள்ளக் குடிசைகளை எரிகும் ஆபத்தான வினையாட்டில் ஈடு படுகிறார்கள்; இது சென்னையில் மட்டுமல்ல — தமிழ் நாடு முழுவதும் இது நடக்கிறது; அதற்காகவே தீப் பிடிக்காத வீடுகளைக் கட்ட முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

இதற்கு வசதியுள்ளவர்கள்—நல்ல வர்கள் உதவவேண்டும் என்ப தற்கு எடுத்துக்காட்டாக இந்த நன்கொடையை வழங்கியிருக் கிறார்கள்.

1930-ல் துவக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலை படிப்படியாக வளர்ந்துவந்துள்ளது. அரசு நடத்தும் பொதுத் தொழிலுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

இங்கு அரசும் ஒரு செய்கல் ஷேர் அமைத்துள்ளது. அத்தற்கு ரு. 80-இலட்சம் மூலதனம் போடப் பட்டுள்ளது.

முதலாம் நிரம்பப் போட்டால் தான் அதில் நன்மை கிடைக்கும் என்பது தவருன கருத்தாகும்.

பொதுத் துறையில் ரு. 80-இலட் சம் போடப்பட்டு சாதிக்கும் சாதனை தனியாட்டப்பட்டுள்ள ரு. 8 ஆயிரம் போட்டுச் சாதித்துவிட் கிறார்கள்.

இங்குள்ள இயந்திரங்களில், 'ஒரே ஒரு இயந்திரம் தவிர மற்ற எல்லா இயந்திரங்களும் இங் கேயே தயாரிக்கப்பட்டவை' என்றார்கள்; ஆனால் அரசு நடத்தும் பொதுத் தொழில் களில், போர்டுகளுக்கூட வெளி நாட்டில் இருந்து தருவிக்கிறர் கள். அப்படிப்பட்ட மயக்க மனப்பான்மை நீங்கவேண்டும். இதையெல்லாம் தெரிந்து கொள்ள தொழிலமைச்சர் இங்கு வந்ததற்கு மகிழ்ச்சி அடைகிறேன்.

தனிப்பட்டவர்கள் நடத்தும் தொழில்களில் அவர்கள், அவர் களது தொழிலோடு வளருகிறர் கள். இந்த விவரங்களைத் தொழி லமைச்சரும், பொதுப் பணி அமைச்சரும் கவனிக்கவேண் டும்.

காட்டில் இப்படிப்பட்ட தொழில் கள் நிரம்பவேண்டும். வேலே தருவது ருருவகை தர்மமாகும். அதனுல்தான வெள்ளக்காரன் கட்டை ருபாவை வட்டமாக அமைத்திருந்தான். ஆனல் நாம் அதை சதர வடிவமாகக் கி நோட்டாக ஆக்கிவிருக்கிறோம்.

செல்வம் என்பது இயங்குவதா கும். அதனல்தான், செல் வத்தை, 'செல்லோம்' என்றர் கள்! ஆனல் இப்போது, 'செல்லோம்' என்ற நிலைதான் இருக்கிறது. இந்த நிலையை மாற்ற இப்படிப்பட்ட தொழில் கள் அவசியமாகும்."

இரா. நெடுஞ்செழியன்

கல்வி அமைச்சர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் கன்றி தெரி வித்துப் பேசுகையில் குறிப்பிட்ட தாவது :—

"குடிசைவாழ் மக்களுக்குத் தீப் பற்றாத வீடுகள் கட்டித் தரு வதற்காகக் கிருஷ்ணு ஒடு தயா ரிப்பாளர்கள் ஒரு இலட்சம் ஒடுகளைத் தமிழக அரசிடம் அளித்திருக்கிறார்கள். சிறப்புக் குரிய பணிக்கு உதவிய பெருந் தன்மையிக்க அவர்களின் உள் ளத்தை நாம் எவ்வளவு பாராட் டினலும் தகும்.

இந்தத் தொழி [illegible] யிலுள்ளவர்கள் [illegible] லுக்கலாம். [illegible] இதழ்சியை [illegible] மோன மொழிவ [illegible] மற்றவர்களுக்கு அறிவுறுத்துகிறார்

சென்னபோல சில கு குடிசையிலே வாழ்கிறார் ஏழை எளியவர்கள் வாழ்க் கையோடு விளையாடுவதையும் அவர்கள் ஏது மற்றவர்களால்— நிர்க்கதியாய் பரதவிக்கும் நிலையை உண்டாக்கித் தீச செயல் புரிவதையும் உணர்ந்து அவர்களுக்கு நிவாரணம் அளிக் கும் முயற்சியில் தமிழக அரசு ஈடுபட்டு வருகிறது.

ஏழை எளிய மக்களுக்கு நேர்ந் துள்ள இந்தக் கொடுமையான நிகழ்ச்சியை, துளிபங்களேனும் துடைப்பதற்கும் பெரு நிதி வசதி தந்து—அதன்மூலம் தீப் பற தாத வீடுகளே கட்டித் தரும் முயற்சியிலே நாங்கள் ஈடுபட் டுக்கொண்டிருக்கிறோம்.

அதனே உணர்ந்து, ஒரு இலட்சம் ஒடுகளே அளித்ததற்கு அவர் களின் தயாரிப்புக்கு மாறு தொழி நிர்க்களையும், மற்ற வனிகப் பெருமக்களையும் கேட்டுக்கொள் வது.

6. 'சாந்தியுகளும் தமிழரும்' என்பதற்கிந்த திரைப் படம் தயாரிப்பது.

தமிழகத்தில் காந்தி நூற்றாண்டு விழா

இவ்வாண்டு நிகழ்ச்சிகள் பற்றிய முடிவுகள்

தமிழகத்தில் 1968 அக்டோபரி லிருந்து 1969 அக்டோபர்வரை கொண்டாடப்படும் காந்தி நூற் றாண்டு விழாவை யொட்டி, இந்த ஆண்டிலேற்கொள்ளவேண்டிய நிகழ்ச்சிகள் பற்றிப் பின வரும் முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின் றன.

தமிழகக் காந்தி நூற்றாண்டு விழாத் தலைக் குழுக்களின் கூட்டு நர்கள் கூட்டத்தில் இவை தீர்மா னிக்கப்பட்டன.

ஜன் 21-ம் நாள் நடந்த கூட்டத் திறகு, கல்வி—தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமை தாங்கினர்.

1. தமிழக அரசாங்க மாளிகையில் —இராஜாஜி மண்டபத்திற்கு அருகில்—லாட்ஜ்' மாளிகை யில், அக்டோபர் 2-ல் காந்தி பார் நினைவைக் குறிக்கும் பொருட்காட்சிச் சாலையைத் திறப்பது.
2. காந்தி சுருத்தரங்கு ஒன்றை அக்டோபர் 2-ல் நடத்துவது, புகழ்மிக்க காந்தியத் தலவர் களே அதில் கலந்துகொள்ள அழைப்பது.
3. காந்தியடிகள்பற்றியும், அவரது எழுத்துக்கள்பற்றியும், நூல்கள் வெளியிடுவது; 'காந்தியடிகளும் தமிழகமும்' என்ற சிறப்பு வெளியீட்டை வெளிக் கொணர் வது.
4. பள்ளிகள், கல்லூரிகள் ஆகிய வற்றில் காந்தி விழா நடத்து வது. மாணவர்கள் நடிக்கும் நாடகங்கள், ஊர் வலங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற் றுக்கு ஏற்பாடு செய்வது.
5. காந்தியடிகளின் உருவப் படத் துடன், காந்தியடி ஓவியங்க களைச் சித்தரிக்கும் காலண்டர் களை தயாரிப்பது.

காந்தி மகவும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

இத்தகைய நல்லெண்ண முடைத்தவர்கள் நாட்டில் இருப் பதால்தான் நாமும் இருக்கி றோம்—நாமும் இருக்கிறது.

இதைத்தான், 'உண்டாலம் அம்ம இவ்வுலகம்' தமக்கென இய லான் நோன்முள் பிறர்க்கென வாழ்தல் உண்மையாளே' என்ற பாடல் நமக்குத் தெளிவுபடுத்து கிறது."

மு. கருணாநிதி

"தீப்பற்றாத வீடுகளே ஏழைக் குடிசைவாழ் மக்களுக்குக் கட் டித் தரும் தீ வீபத்து நிவாரண நிதிக்காக ஏழை எளியவர்கள் —நடுத்தர மக்கள்—தொழிலதி பர்கள் ஆகிய எல்லாத் தரப் பினரும் சேர்ந்து ரு 35 இலட் சம ரூபாவுக்கு மேலாக நன்கொடைகளாக வழங்கி யதை நீங்கள் அறிவீர்கள்.

இதிலிருந்து ஏழு அல்லது எட்டு [illegible] ரூபாய்ச் செலவில் [illegible] ரத வீடுகளே அர [illegible] சைவாழ் மக [illegible] த் தந்திருப்பதை [illegible] ரிகள்.

[illegible] ர் கட்டப்பட்ட [illegible] நந்த செல [illegible] லான வீடு [illegible] தரத் தமிழக [illegible] மிடப்பட்டு அதற் காக மாதிரி வீடுகள் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அந்த நல்ல திட்டத்திற்கு உறு தியளிக்கவும் வகையில் திருவான் லைவா அவர்கள் தனது இந்த ஒரு இலட்சம் ஒடு கள் சுமார் 500 வீடுகளுக்கு கட் டித் தருவதற்கு வாய்ப்பளிக் அளிக்கக்கூடியவையாகவும் கிறது.

அந்த வகையில், இந்தத் தொழில் அதிபர்கள் அளித்த இந்த நன் கொடைக்கு நான் மனமி தெரி விப்பதன்—ஏன்—பாராட்டுவது விட—முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் பாராட்டி வாழ்த்துக் கூறுவதே பொருத்த மாக இருக்கும்."

சிற்றுண்டி விடுதிகளில் விலைக் குறைப்பு

கழகத் தோழர்களின் முயற்சி வெற்றி

கழகத் தோழரும் காட்டுமன்னர் கோயில் ஊராட்சி ஒன்றிப்பு சிறனித் தலைவருமான இரா. கணேசன், நகர நி. மு கழகச் செயலாளர் ந. பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமையில் 19 6 68 அன்று ஐம்பதுக்கு மேற்பட்ட கழகத் தோழர்கள், நகரத்தி லுள்ள சிற்றுண்டி விடுதிகளுக் குச் சென்று விலைவரி குறைந் திருப்பதை எடுத்துச் சொல்லி— காப்பி, இட்லி, மற்றும் பலகாரங் களின் விலைகளைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண் டதன் பலனுக—சிற்றுண்டி விடுதி களின் உரிமையாளர்கள் விலை யைக் குறைக்க ஒப்புக்கொண் டனர்.

முன்பு விற்ற விலை :—காப்பி 20 காசு ; இட்லி 7 காசு; வடை 15 காசு; பூரி 80 காசு.

இப்போது குறைத்து விற்கப் படும் விலை :—காப்பி 15 காசு ; இட்லி 5 காசு; வடை 10 காசு ; பூரி 25 காசு.

சிற்றுண்டி விடுதிகளின் பொறுப்பாளர்கள், இந்த வேண்டு கோளுக்கு இணங்க விலைகளைக் குறைத்தமைக்காக நகர தி. மு. க. சார்பில் நன்றியும், வணக்கமும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

முதியவர்கள் மறுவாழ்வு!

வயது முதிர்ச்சியின் காரண மாக உடல் தளர்ந்து மூலியில் முடங்கிப்போனவர்கள் பழையபடி இளமை வேகத்துடன் நடமாடிச் செயல்படச் செய்வதற்கான புது முயற்சி முதலில் டெல்லியில் உள்ள ராட்டர் டாம் நகரண்மைக் கழகத்து மருத்துவமனையைச் சேர்ந்த ஆராய்க்கிய விடுதியில் கையாளப் பட்டுவருகின்றன.

முதியோரை மீண்டும் இளங் குடிசைவாழ் மக்களுக்குக் கட் டித் தரும் தீ வீபத்து நிவாரண நிதிக்காக ஏழை எளியவர்கள் —நடுத்தர மக்கள்—தொழிலதி பர்கள் ஆகிய எல்லாத் தரப் பினரும் சேர்ந்து ரு 35 இலட் சம நன்கொடைகளாக வழங்கி யதை நீங்கள் அறிவீர்கள்.

இதிலிருந்து ஏழு அல்லது எட்டு [illegible] ரூபாய்ச் செலவில் [illegible] ரத வீடுகளே அர [illegible] சைவாழ் மக [illegible] த் தந்திருப்பதை [illegible] ரிகள்.

[illegible] ர் கட்டப்பட்ட [illegible] நந்த செல [illegible] லான வீடு [illegible] தரத் தமிழக [illegible] மிடப்பட்டு அதற் காக மாதிரி வீடுகள் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அந்த நல்ல திட்டத்திற்கு உறு தியளிக்கவும் வகையில் திருவான் லைவா அவர்கள் தனது இந்த ஒரு இலட்சம் ஒடு கள் சுமார் 500 வீடுகளுக்கு கட் டித் தருவதற்கு வாய்ப்பளிக் அளிக்கக்கூடியவையாகவும் கிறது.

அந்த வகையில், இந்தத் தொழில் அதிபர்கள் அளித்த இந்த நன் கொடைக்கு நான் மனமி தெரி விப்பதன்—ஏன்—பாராட்டுவது விட—முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் பாராட்டி வாழ்த்துக் கூறுவதே பொருத்த மாக இருக்கும்."

பொதுவாக, இயலாமையை வளர்த்துக்கொள்ளும் வகையில் மூலியில் முடங்கிக் கிடப்பதைத் தவிர்க்க அவர்கள் தங்கள் உடலே இயக்கியவாறு இருத்தல் வேண்டும்.

காரணம் காட்டாமலே குறைந்த வட்டியில் கடன் பெறலாம்

இடைக் காலத்தில் பாதித் தொகையைத் திரும்பப் பெறவும் வசதியுண்டு

பொதுமக்கள் சேமிப்பு நிதித் திட்ட விவரங்கள்

புதுடில்லி, சூன் 25—

வருகிற சூலை முதல் நாளிலிருந்து நடைமுறைக்கு வரவிருக்கும் பொதுமக்கள் சேமிப்பு நிதித் திட்டத்தின் விவரங்கள் அடங்கிய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது

இந்திய அரசாங்க பாங்கியின் கிளைகளும், அதன் துணை பாங்கிகளும் சூலை முதல் நாளிலிருந்து பொதுமக்களிடமிருந்து பிராவிடண்டு நிதிக்குச் சந்தாப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும்.

யார் வேண்டுமானாலும் இந்த நிதிக்குத் தம்முடைய பெயரிலோ அல்லது தாம் கார்டியனாக இருக்கும் 'மைனரி'ன் பெயரிலோ பணம் செலுத்தலாம்.

ஓராண்டில் ரூ. 100-க்குக் குறையாமலும்—ரூ 15,000- கு மேற்படாமலும் போடலாம்.

ஓராண்டில் எப்போது வேண்டுமானாலும் இந்த நிதிக்குப் பணம் செலுத்தலாம். சந்தாத் தொகையை ஒரேயடிாகவோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளாகவோ செலுத்தலாம்.

ஐந்து ரூபாய்களின் தொகுதியாகவே பணம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு சந்தாதாரருக்கும் ஒரு 'பாஸ் புத்தகம்' தரப்படும்.

சேமிப்பு நிதியில் போடப்படும் பணத்திற்கு அவ்வப்போது அரசு விதிக்கும் விகிதங்களின்படி வட்டி தரப்படும். நடப்பு ஆண்டிற்கு 4 8 சதவிகித வட்டி தரப்படும்.

ஒவ்வொரு மாதமும் 5-ந் தேதி முடிவுக்கும்—மாத இறுதிக்குமிடையே சந்தாதாரரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச பணத்திற்கு ஒவ்வொரு மாதத்திற்கும் வட்டியுண்டு. இந்த வட்டிப் பணம் ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் சந்தாதாரர் கணக்கில் வரவு வைக்கப்படும்.

ஆயுள் இன்ஷ்யூரன்சு பிரீமியம் செலுத்துவது மூலமாக ஏற்படும் சேமிப்பு—அரசுக்கும், அங்கீகாரம் செய்யப்பட்டுள்ள பிராவிடண்டு நிதிகளுக்கும் கொடுக்கிற பணம்—அஞ்சல் அலுவலகங்களில போட்டுவரும் டெபாசிட் பணம் முதலியவற்றிற்கு வருமான வரி விலக்கு உண்டு.

பொதுமக்கள் சேமிப்பு நிதி உட்பட இந்த இனங்களில ஏற்படும் சேமிப்புகளில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம், சந்தாதாரரின் வருமான வரியைக் கணக்கிடுகையில் கழிக்கப்படும்.

அங்கீகாரம் செய்யப்பட்டுள்ள சேமிப்புகளில் முதல் ரூ 5,000 ரூபாயில் 60 சதவிகிதமும், அந்தச் சேமிப்பின் பாக்கியில் 50 சதவிகிதமும் வருமான வரியில் கழித்துக்கொள்ளப்படும்.

ஆனால் இவ்வாறு கழிக்கப்படும் பணம், சந்தாதாரரின் வருமானத்தில் 30 சதவிகிதத்திற்கோ அல்லது ரூ. 15,000-க்கோ அதிகமாக இருக்கக்கூடாது. இந்த இரு தொகைகளில் எது குறைவோ அதையே கணக்கிற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

[illegible] நிதியில் பாக்கியுள்ள பணத்[illegible]குத் தரப்படும் வட்டிக்கு [illegible]ரு தருமானவரி கிடையாது

இந்த நிதியிலிருந்து எடுக்கப்படும் பணத்திற்கும் வருமானவரி கிடையாது.

இந்த நிதியில் உள்ள பாக்கிப் பணத்திற்குச் சொத்து வரியும் கிடையாது.

இந்த நிதியில் சந்தாதாரர் கணக்கில் உள்ள பணத்தை சந்தாதாரர் வாங்கிய கடனுக்காக நீதிமன்ற நடவடிக்கை மூலமாகவோ வேறு எந்த வழியிலோ பறிமுதல் செய்ய முடியாது.

சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுப் பணத்தைப் பகுதிகளாகச் சந்தாதாரர்கள் எடுத்துக்கொள்ளலாம்.

பணம் போட்ட ஆண்டு இறுதியிலிருந்து 5 ஆண்டுகளில் முதல் தடவையாகச் சந்தாதாரர் கணக்கில் உள்ள சேமிப்பின் 50 சதவிகிதம் பகுதியைத் திரும்பப் பெறலாம். பிறகு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை எடுத்துக்கொள்ளலாம்.

உதாரணமாக 1968—69-ல் சேமிப்பு நிதியில் பணம் போடும் ஒருவர் 1974 ஏப்ரல் 1-ம் நாள் முதல் தடவையாகப் பணத்தை எடுக்கலாம்; அதாவது, 1968—69 இறுதியில் அவருடைய கணக்கில் சேமிப்பாக இருந்த பணத்தில் 50-சதவிகிதப் பங்கிற்கு அதிகமாக எடுக்கமுடியாது; அடுத்த தடவை 1977 ஏப்ரல் 2-ம் நாள்தான் பணம் எடுக்கலாம்; அதாவது, 1971—72-ல் அவருடைய கணக்கில் இருந்த பணத்தில் 50-சதவிகிதப் பங்கு எடுக்கலாம். கணக்கு ஆரம்பித்த ஆண்டு இறுதியிலிருந்து 15-ஆண்டுகளுக்குப்பிறகு, முழுப் பணத்தையும் எடுத்துக் கொள்ளலாம்.

காரணம் காட்டாமல் உரிய விண்ணப்பப் பாரங்களை நிரப்பி அனுப்பிப் பணம் பெற்றுக் கொள்ளலாம்.

முதலாவது 5-ஆண்டுகளில் பணம் தேவைப்படும் சந்தாதாரர்கள், இரண்டாவது ஆண்டு இறுதியில் கடன் பெறலாம்.

கடன் வாங்க எண்ணிய முந்தின ஆண்டின் இறுதியில் அவருடைய கணக்கில் உள்ள பணத்தில் 25-சதவிகிதம் கடன் பெறலாம்; உரிய பாரத்தில், விண்ணப்பம் செய்து காரணம் காட்டாமலே கடன் பெறலாம்; அதாவது, 1968—69-ல் கணக்கு ஆரம்பிக்கும் ஒருவர் 1970—71-ல் எப்போது வேண்டுமானாலும் 1968—69 ல் அவருடைய கணக்கில் இருந்த பணத்தில் 25-சதவிகிதப் பங்கைக் கடனாகப் பெறலாம்.

கடனை 24-மாதங்களில் ஒரு தவணையாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தவணைகளாகவோ திருப்பிக் கொடுக்கலாம்; உரிய காலத்திற்குள் திருப்பித் தரப்பட்டால் வட்டி 2-சதவிகிதமே. அந்தக் காலத்திற்குப் பிறகு, பாக்கி தரவேண்டிய பணத்திற்கு 6-சதவிகிதம் வட்டி தரவேண்டும்.

சந்தாதாரர் தம்து [illegible] பிறகு பணத்[illegible] ஒரு நபரையோ [illegible] நபர்களையோ [illegible] லாம்.

உப்பல[illegible]

ஆண்[illegible]

கடலூருக்கு அடுத்த உப்பல வாடி தி. மு. கழக 9-வது ஆண்டு விழா 19—6—68-ல், தோழர் மு பழனி தலைமையில் நடைபெற்றது வழக்கறிஞர் இரெ. இளம்வழுதி எம்.எல் ஏ., வட்டச் செயலாளர் ஏ. வி. தண்டபாணி, நகரச் செயலாளர் கி. கோவிந்தராசன், வி. நடேசன் எம்.சி., கே. முத்து எம்.சி. ஆகியோர் கழகத் தலைவர்கள் படத்தைத் திறந்துவைத்து தி. மு. க ஆட்சி பொறுப்பேற்றபின், நாட்டுக்கும் மக்களுக்கும் ஆற்றிவரும் பணிகளை விளக்கினர்.

இனி காங்கிரசுக்காரர்கள், மக்கள் மத்தியில் வரமுடியாத சூழ்நிலை நாட்டில் எங்கும உருவாகிக் கொண்டு வருவது பற்றியும் எடுத்துரைத்தனர்.

ஒருமைப்பாட்டுக் குழுவின் முடிவுகள்

இரா. செழியன் கருத்து

ஸ்ரீநகர், சூன் 23—

இங்கு நடைபெற்று முடிந்த ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம் குறித்து நாடாளுமன்ற தி. மு. க குழுவின் செயலாளர் இரா. செழியன் கருத்தறிவிக்கும்வகையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார் :—

"போதிய காலம் ஒதுக்கப்படாததால் குழு உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகளையும் விரிவாகவும், ஆழமாகவும் விவாதிக்க முடியவில்லை.

'எனினும், கூட்டத்தின் முடிவுகள் நம்பிக்கையூட்டுவனவாகவேயுள்ளன. அவற்றை அரசினர், நல்லெண்ணத்தோடும் அக்கறையோடும் செயல்படுத்த முன்வருவர் என நம்புகிறேன்."

ஆலந்தூர் நகர தி.மு.க.

ஏழு வார்டு கிளைகளில் மறு தேர்தல்

சைதை வட்டம் ஆலந்தூர் நகரத்தில் வார்டுகள்வாரியாக அமைக்கப்பட்ட தி. மு. க. உட் கிளை (வார்டு கிளை)களில் நடைபெற்ற தேர்தல்களில், 'முறைப்படி உறுப்பினர்கள் கூடி தேர்தல் நடத்தவில்லை' என்று தலைமைக் கழகம் பரிசீலனை செய்து முடிவெடுத்து, கீழ்க்காணும் 7-வார்டுகளில் 30—6—68 ஞாயிறன்று காலை 10-மணிக்குத் தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்கள் தலைமையில் மறு தேர்தல் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

கீழ்க் குறிப்பிட்டுள்ள வார்டுகளுக்கான மறு தேர்தல், அந்தந்த வார்டுகளைச் சார்ந்த பொதுவான இடத்தில் நடைபெறும்.

மறு தேர்தல் நடக்கும் வார்டுகளின் எண்கள் :

4, 7, 8, 9, 10, 11, 15

ஆகிய ஏழு வார்டுகள்

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

திருத்தங்கல் எம். ஜி. ஆர். மன்றம்

[illegible]த்தங்[illegible] எம். ஜி. ஆர். மன்[illegible] [illegible]ர்வாகிகள் தேர்[illegible] செயலாளர் ஏ. [illegible]லையில்—டேவிட் [illegible]மையில் நடந்தது; [illegible]கள் தேர்ந்தெடுக[illegible]

[illegible]லைவர் : டேவிட் இரச்[illegible] செயலாளர் : க. நடரா[illegible]; துணைச் செயலாளர் : ஏ மாணிக்கம்; பொருளாளர் : இரா. நடராசன்; கழகப் பிரதிநிதி, என். ஆர். நாதன; செயற்குழு உறுப்பினர்கள் : ஏ. எம். சங்கர், திராவிடக் கனி, இராசரத்தினம், அய்யாத்துரை, பாலகிருஷ்ணன், இராமர், ஜான், செல்லையா.

மணி—சாமி குழுவினர் அறிவிப்பு

தென்காசி இடைத் தேர்தல் பிரசாரத்துக்குச் செல்ல வேண்டியிருப்பதால், சூன் மாதத்தில் கலந்துகொள்ள ஒப்புக்கொண்டுள்ள நிகழ்ச்சிகளை சூலை மாதத்திற்கு மாற்றி வேறு தேதிகள் தருவதாக மணி—சாமி குழுவினர் அறிவிக்கின்றனர்.

தீப்பற்றிய குடிசைப் பகுதிகளில் அமைச்சர் முத்துசாமி

பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு ஆறுதல்—உதவி

சென்னை, சூன் 25—

பெரம்பூர் பகுதியில் தீயினால் பாதிக்கப்பட்ட இடங்களை உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் சுற்றிப் பார்த்தார்.

அமைச்சருடன் சேலம் மாவட்ட மோகலூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் எஸ். எம். கிருஷ்ணன், சென்னை மாநகராட்சி உறுப்பினர்களான சு. பாலன், டி. நடராசன், லோகநாதன், அன்பிற்கரசன், பெரம்பூர் பகுதிச் சீரணித் தலைவர் டில்லிராஜ் ஆகியோர் வந்திருந்தனர்.

அமைச்சர் தீயினால பாதிக்கப்பட்ட இடங்களான திரு. வி. க, நகர், மோகன முதலி தோட்டம். வாடியா நகர், குருசாமி நகர், காந்திஜி நகர், கிரே நகர் ஆகிய பகுதிகளைப் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்கள் அமைச்சரிடம் தாங்கள் தங்குவதற்கு இடமில்லாமல் அவதிப்படுவதாகவும், குறிப்பாக இரண்டு நாள் மழையினால் மிகவும் அவதிப்பட்டதாகவும் தெரிவித்தார்கள்.

உடனடியாக வீடு கட்டிக் கொள்வதற்கு முதலமைச்சர் அண்ணா அவர்களைக் கலந்து ஆவன செய்வதாக அமைச்சர் கூறினார்.

திரு. வி. க. நகரில் சென்ற 12—6—68 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் காதர் உசேன் என்பவரின் மகள் திருமணத்திற்காக வாங்கி வைக்கப்பட்ட பொருள் அழிந்துவிட்டன; இது பற்றி அவர், முன்பு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களிடம் முறையிட்டு, உதவும்படிக் கேட்டுக் கொண்டார்.

அதற்கிணங்க பெரம்பூர் பகுதிக் கழகத் தோழர்களின் முயற்சியால பெரம்பூர் கார்னேசன பொழுது போக்கு மன்றச் செயலாளர் பிரகாஷ் ரூ. 100 பெறுமானமுள்ள பொருள்களை அமைச்சர் முத்துசாமியிடம் கொடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்காக வழங்கும்படிச் சொன்னார்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் எஸ். எம். கிருஷ்ணன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 50 நன் கொடையாக அமைச்சர் முத்துசாமியிடம் கொடுத்தார்.

அதையும் அமைச்சர் வாங்கி தோழர் பாலனிடம் கொடுத்து ஆவன செய்யும்படி கூறினார்.

பியட் வண்டிகளில் 4 பேர் செல்ல அனுமதி

வாடகைக் கார்களின சொந்தக்காரர்கள் கவனிக்க :

சென்னை, சூன் 23—

சென்னை நகரில் ஓடும் பியட் வாடகைக் கார்கள், 4-பேர்களை (ஓட்டுநர் நீக்கி) ஏற்றிச் செல்ல வேண்டும் என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பியட் மாடல் வாடகைக் கார் சொந்தக்காரர்கள், தங்கள் வண்டிகளில் 4-பேர்களை ஏற்றிச் செல்வதற்குரிய அனுமதிகளைப் பெறுவதற்காக செப். 18-ஆம் நாளுக்குள் மனுச் செய்துகொள்ள வேண்டும் என்றும், இதற்காகக் கட்டணம் எதுவும் செலுத்தவேண்டாம் என்றும், இந்தச் சலுகையைப் பயன்படுத்திக்கொள்ளுமாறும் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி அறிவிப்புச் செய்துள்ளார்.

மேற்கண்ட தேதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்களுக்கு மோட்டார் வாகனச் சட்ட விதி 209 (பி)-யின்படி கட்டணம் வசூலிக்கப்படும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

திருத்தங்கல் நாவலர் மன்றம்

திருத்தங்கல் நாவலர் நெடுஞ்செழியன் மன்றத்தின் புதிய நிர்வாகிகள், தோழர் இரா. பொன்பாண்டியன் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; விவரம் :—

தலைவர் : கே மாரிமுத்து; செயலாளர் : சு. காளிமுத்து; துணைச் செயலாளர் : டி. எஸ். பாலகிருஷ்ணன்; பொருளாளர் : எம். பெருமாள்; கழகப் பிரதிநிதிகள் : எம் கருப்பசாமி, ஆர். மீனாட்சிசுந்தரம்; செயற்குழு உறுப்பினர்கள் : சுந்தரராசன், சுப்பா ரெட்டியார் வி. பி. சுப்பிரமணியன், கணேசன், சிவபெருமாள், சின்னத்தம்பி உமையார், மாடசாமி, சுப்பையா.

திருத்தங்கல் கழகச் செயலாளர் கடைக்குத் தீ

காங்கிரசுக்காரர் கைது

திருத்தங்கல் நகர தி. மு. கழகச் செயலாளர் ஏ. எஸ். கனியின் பெட்டிக் கடைக்கு 19—6—69 இரவு சுமார் 1-மணியளவில் தீ வைக்கப்பட்டது.

கடையின் மேற்கூரை தீப்பிடித்து எரிய ஆரம்பித்ததைக் கண்ட வழிப்போக்கர்களும், பக்கத்து வீட்டுக்காரர்களும் பதறியோடி தீ மேலும் பரவாமல் தடுத்தனர்.

இது சம்பந்தமாகத் திருத்தங்கல் போலீசில் புகார் செய்யப்பட்டது. காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த எம். சங்கரலிங்க நாடார் என்பவர் கைது செய்யப்பட்டு அவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பின்னர் அவர் பொறுப்பில் விடப்பட்டார்.

திருத்தங்கல்லில் கழகக் கூட்டம்

திருத்தங்கல் நாவலர் நெடுஞ்செழியன் மன்ற 2-வது ஆண்டு நிறைவு விழாப் பொதுக்கூட்டம் 2—6—68-ல், தோழர் எம். கருப்பசாமி தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் அப்தாலீப், ஏ. எஸ். கனி, பொன்னு பாண்டியன், அய்யனார், லூர்துசாமி, எஸ். சுப்பிரமணியன், ஏ. குருசாமி, வெள்ளைச்சாமி, ஏ. பி. பாண்டியன், திராவிடக் கனி ஆகியோர் பேசினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் நேசமணி மறைவுக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விபத்துக்களைத் தவிர்க்க 'கம்ப்யூட்டர்'!

நின்றுகொண்டிருக்கும் வண்டியில் வேறொரு இரயில் மோதுவது—எதிரும் புதிருமாக இரு இரயில் வண்டிகள் வந்து மோதிக்கொள்வது—ஆகியவை, தவறான 'சிக்னல்'களால் நிகழ்கின்ற விபத்துக்கள்! இவற்றைத் தவிர்க்க இப்போது பிரிட்டனில் 'கம்ப்யூட்டரை'ப் பயன்படுத்துகிறார்கள்!

"தவறான, 'சிக்னல்' தருவதாலோ, அல்லது எந்தவித 'சிக்னலும்' தராதிருப்பதாலோதான் பெரும்பாலான விபத்துக்கள் நிகழ்கின்றன; அதற்குப் பொறுப்பானவர்களின் கவனமின்மையால் இந்தவித தவறுகள் நிகழ்கின்றன. 'கம்ப்யூட்டர்'களைப் பயன்படுத்தினால் இந்தவிதத் தவறுகள் நிகழ வழியே இல்லை" என்று பிரிட்டிஷ் இரயில்வே அதிகாரி ஒருவர் கூறினார்.

'கம்ப்யூட்டர்'கள் உதவியினால் 'சிக்னல்' அனுப்புவோர், ஒரு நாளைக்கு 500-க்கும் அதிகமான பயணிகள் வண்டி—மற்றும் சரக்கு இயில்களைக் கட்டுப்படுத்த முடிகிறது. இயந்திரங்களில் ஏதும் பழுது ஏற்பட்டால் அதனையும் 'கம்ப்யூட்டர்' தெரிவித்துவிடும்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு

தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு (சனவரி 1968)

கணக்கு விவரம்

1. கருத்தரங்கு சம்பந்தமான கணக்கு விவரங்கள், பொதுச்செயலாளரும் பொருளாளருமான திரு. வி. எஸ். தியாகராசன் அவர்களால் முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.
2. மாணவர்களிடமிருந்தும். ஆசிரியர்களிடமிருந்தும் வசூலான தொகைகள்—மற்றும் கோயில்கள், மடங்கள் ஆகியவற்றிலிருந்து வசூலான தொகைகள் பற்றிய கணக்கு, கல்வி அமைச்சரால் விரைவில் வெளியிடப்படும்.
3. மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வசூலிக்கப்பட்ட தொகைகளில் ஒரு பகுதி, தமிழ் மாநாட்டுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது; அதுவும், மற்றும் வசூலான தொகைகள் பற்றிய கணக்கும், மாநாட்டு (நிறுவன) பொதுச்செயலாளரால் கீழே குறிப்பிட்ட இனங்களில் செலவழிக்கப்பட்ட தொகைகள் பற்றிய தணிக்கை செய்யப்பட்ட கணக்கு விவரம் இங்கே தரப்படுகிறது :—

1. சனவரி 1, 2, 3-ம் நாட்களில் நடைபெற்ற பொதுக்கூட்டங்கள்
2. மாநாட்டுக் கலை ஊர்வலம்
3. பூம்புகார் மாநாடு
4. மலர்
5. புகாரில் ஒரு நாள்
6. கண்காட்சி

எம். ஆர். பெருமாள் முதலியார்,
தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், உலகத் தமிழ் மாநாட்டு (நிறுவன) பொதுச்செயலாளர்

வரவுகள்

	ரூ. காசு	ரூ. காசு
வடஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம்	3,00,000.00	
மதுரை ,, ,,	2,00,000.00	
நெல்லை ,, ,,	3,00,000.00	
சேலம் ,, ,,	1,50,000.00	
கோவை ,, ,,	2,00,000.00	
சென்னை ,, ,,	2,03,800.00	
		13,53,800 00
திரு. எம். ஜி. ஆர். அவர்களிடமிருந்து கடனாகப் பெற்றது		25,000.00
பூம்புகார் நுழைவுக் கட்டண வசூல்		3,33,700.69
டால்மியா சிமெண்டு பாரத் லிமிடெட்		5,301 00
ரூ. 5,000-க்குக் குறைவான நன்கொடைகள் (அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி)		31,673.95
எஸ். எம். ஈ. எஸ். சி. லிமிடெட், திருச்சி		10,000 00
மலர் விற்பனை		20,052 00
சில்லறை வரவுகள்		35,908.06
பொதுச்செயலாளர்—பொருளாளர் மூலம்		10,000.00
திருச்செந்தூர் தேவஸ்தானத்திலிருந்து		2 000.00
திருமதி சந்திரகாந்தி		2,500.00
ஆக மொத்தம்		**18,29,935.70**

செலவுகள்

திருக்குறள் ஆராய்ச்சிக்காக அறக் கட்டளை வழங்கிய வகையில்—		
சென்னைப் பல்கலைக் கழகம்	3,00,000.00	
மதுரைப் பல்கலைக் கழகம்	3,00,000.00	
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்	3,00,000.00	
		9,00,000.00
சித்த வைத்தியக் குழு		15,000.00
விளம்பரம்		4,284.40
அறை வாடகை		588.00
விருந்தினர் செலவு		776.00
பெட்ரோல், கார் பராமரிப்பு		7,380.21
மாவட்டக் கலை நிகழ்ச்சிகள் வகையில்		12,500 00
பூம்புகார் (அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி)		3,19,477.56
அலுவலகம் மற்றும் இதர செலவுகள்—		
தொலைபேசி	986.48	
அலுவலகச் செலவுகள்	15,699.21	
சில்லரைச் செலவுகள்	1,187.14	17,872.83
பாங்கி கட்டணம்		957.92
இதர இனங்கள்—		
திரு. எம். ஜி. ஆ.ருக்குக் கடனைத் திருப்பிக் கொடுத்தது		25,000.00
மலர் ஓவியர்களுக்கு	5,806.00	
அச்சக முன்பணம்	2,75,000.00	
		2,80,806.[illegible]
கண்காட்சி ஓவியங்கள், ஓவியர்கள்	11,267.83	
சா. கணேசன்	75,000.00	
ஊர்வலச் செலவுகள்	75,924.19	
எஸ்.பி.டி. மேற்பார்வை பொறியாளருக்கு முன்பணம்	45,000 00	[illegible]
இருப்பு—		
பாங்கியில் இருப்பு	37,730.95	
கைவசம் [illegible]க்கம்	369.81	38,[illegible]
ஆக மொத்தம்		**18,29,935.70**

குறிப்பு :—இன்னும் தரப்பட வேண்டிய பாக்கி ரூ. 36,489,22.

அட்டவணை

புறவேலைக் குழு (பூம்புகார் செலவுகள்)

மொத்தச் செலவுகள்		3 39 690.71
கழிவு : எம்.இ.எஸ்.-க்கு வழங்கிய தொகை		31 950.00
		3,07,740.71
கழிவு : திரு. நீலகாராயணன் திருப்பித் தந்த தொகை		10.66
		3,07,730.05
கூடுதல் : எம்.இ.எஸ்.-சுக்குக் கட்டிய மின்சாரக் கட்டணம்	11 747 51	
இன்னும் தரப்பட வேண்டிய செலவுகள் வகையில்	25,664 33	37,411.84
ஆக மொத்தம்		3,45,141.89

(அடுத்த கலம் பார்க்க)

முரசொலி மாறன் அமெரிக்கப் பயணம்

முதலமைச்சர் அண்ணா வழியனுப்பி வைத்தார்

விமானநிலையத்தில்சிறப்பான வழியனுப்பு நிகழ்ச்சி

சென்னை, சூன் 24—

ஹார்வர்டு பல்கலைக் கழகத்தின் அழைப்பை ஏற்று அமெரிக்கா செல்லும் முரசொலி மாறன் எம்.பி., இன்று பிற்பகல் 2-30 மணியளவில் விமானம் மூலம் பயணமானார்.

மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா, கல்வி அமைச்சர் இராநெடுஞ்செழியன், உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி, அட்வகேட்-ஜெனரல் நாராயணசாமி, சென்னை, சேலம், திருச்சி, முகவை மாவட்டச் செயலாளர்களான நீலகாராயணன், ஈ. ஆர். கிருஷ்ணன், அன்பில் தருமலிங்கம், எஸ். எஸ் தென்னரசு ஆகியோரும், கழக நாடாளுமன்ற—சட்டமன்ற—மாநகராட்சி மன்ற உறுப்பினர்களும், கழக நிர்வாகிகளும், தோழர்களும், கலைத்துறை நண்பர்களும் ஏராளமாக வந்து மலர்மாலை அணிவித்து வழியனுப்பி வைத்தனர்.

இன்று காலை திரு. மாறன் அவர்கள் இல்லத்திற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, உள்ளாட்சித்துறை அமைச்சர் முத்துசாமி, அரசாங்க வழக்கறிஞர் கோகுலகிருஷ்ணன், மற்றும் கழகத் தோழர்களும், நண்பர்களும் வந்திருந்து மலர்மாலைகள் அணிவித்து வாழ்த்துத் தெரிவித்துச் சென்றனர்.

அமெரிக்கா புறப்படுமுன் முரசொலி மாறன் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களின் இல்லம் சென்று மாலை அணிவித்து அண்ணாவின் வாழ்த்தைப் பெற்றுக் கொண்டார்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பினர். கழகத்தின் வளர்ச்சிக்காக இடைவிடாது தொண்டாற்றியவர். கழகத்தின் வெற்றிக்காக அயராது உழைத்தவர். நடுத்தர குடும்பத்தில் பிறந்து இளமை முதல் பல தொல்லைகளை ஏற்றுக்கொண்டு கழகத்தில் அயராது பணியாற்றியவர் ஆவார்.''

'முகத்தில் சுருக்கங்கள் விழ ஆரம்பித்துவிட்டதே' என்று இனி எவரும் கவலைப்பட வேண்டியதில்லையாம்!

ஜெர்மன் நிபுணர்கள், ஓர் அற்புதமான 'நுரை'யை கண்டுபிடித்திருக்கிறார்கள். பாலிலிருந்து தயாரான ஒருவித 'வைட்டமின்'களையும் ஒருவித ஹார்மோனையும் சேர்த்து புதுமையான நுரை'யைத் தயாரித்திருக்கிறார்கள்.

தமிழக மின் குழு செங்கற்பட்டு மின்பெருவட்டம்

விற்பனை அறிக்கை

54275 லிட்டர் கொள்ளளவுள்ள 30 அடி நீளம் 9 அடி விட்டமுள்ள இரு எண்ணெய்த் தொட்டிகள், காஞ்சிபுரம் பஞ்சுப்பேட்டை 110 K V. மின் நிலையத்தில் ''அவை உள்ள நிலையிலேயே'' விற்கப்பட இருக்கின்றன.

மேற்கூறிய இரண்டு எண்ணெய்த் தொட்டிகளை (டாங்குகளை) வாங்குவதற்கான மூடி முத்திரையிட்ட விலை ஒப்பங்கள் 12—7—68 தேதி 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். எல்லா விலை ஒப்பங்களும் ரூ. 200 (ரூபாய் இரண்டு நூறு மட்டும்) பிணைத் தொகை (E. M. D) செலுத்தியதற்கான ரசீதுடன் அனுப்பப்படுதல் வேண்டும். பிணைத் தொகையை (E,M D) இவ்வலுவலகத்தில் நேரில் செலுத்தலாம். அல்லது மணியார்டர் அல்லது Demand Draft மூலம் தலைமைக் கணக்கர், செலவுப் பிரிவு, செங்கற்பட்டு மின் பெருவட்டம், இரயில்வே சாலை, காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு அனுப்பி ரசீது பெற்றுக் கொள்ளலாம். பிணைத் தொகை செலுத்தப்படாத விலை ஒப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வாங்குவதற்கு விருப்பமுள்ளவர்கள் எண்ணெய்த் தொட்டிகளை காஞ்சிபுரம் பஞ்சுப்பேட்டை 110 K. V. மின் நிலையத்தில் அலுவலக நேரத்தில் சென்று அவைகளுடைய நிலையை அறிந்துகொள்ளலாம். இந்தத் தொட்டிகளைப் பற்றிய வேறு எந்தக் குறிப்புகளும், இவ்வலுவலகத்திலிருந்து கொடுக்கப்படமாட்டாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட விலை ஒப்பந்ததாரர், எண்ணெய்த் தொட்டிகளின் கிரயத்தையும் இவ்வலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்ட பதினைந்து (15) நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். அப்படி மொத்தத் தொகையைக் குறிப்பிட்ட நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் பிணைப்புத் தொகையை (E M. D) இழக்க நேரிடும்.

சூப்பரிண்டென்டிங் இஞ்சினியர்,
செங்கற்பட்டு மின் பெருவட்டம்,
காஞ்சிபுரம்.

டில்லித் தமிழ்ப் பேராசிரியர்கள் சுற்றுப்பயணம்

தமிழகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் சாலை இளந்திரையன், திருமதி சாலினி இளந்திரையன் இருவரும் சூலை முதல்தேதி சேலம் வந்து சேருகிறார்கள்.

சூலை 2, 3, 4-ம் நாட்களில் சேலத்திலும், சுற்றுப்புறப் பேரூர்களிலும் உள்ள தமிழ் அன்பர்கள்—அறிஞர்கள்—தன்மான இயக்கத் தோழர்கள் ஆகியோரைச் சந்தித்துத் தமிழ் வளர்ச்சிக்குரிய திட்டங்கள் பற்றியும், சமுதாயச் சீர்திருத்தம் பற்றியும் பேசுவார்கள்.

அவர்களைச் சந்திக்க விரும்பும் அன்பர்களும் நிறுவனத்தினரும், 'திரு. தமிழ்நாடன், 192. மேட்டுத் தெரு, தாதகாப்பட்டி, சேலம்—6, அவர்களோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(முன் கலத்தின் தொடர்ச்சி)

ரூ. 5000-க்குக் குறைவான நன்கொடைகள்

	ரூ. காசு
[illegible] ஆட்சியாளர்	3,000.00
[illegible]மெரிக்கா'வைச் சேர்ந்த [illegible]ன்	75.00
[illegible]நிலைப் பள்ளி பழைய மாணவர் சங்கம்	51 00
[illegible]ளைப்	500.00
[illegible]ார சங்கம்	1,001 00
[illegible]சேர்ந்த கருப்பையா	120.05
[illegible] ஜம்புநாதன்	40.00
சேலம் முன்னாள் இராணுவ ஊழியர் மோட்டார் போக்குவரத்துக் கூட்டுறவுத் தொழிலாளர் சங்கத்திடமிருந்து	1,001 00
சித்தூர் கூட்டுறவு நகர பாங்கி	11.16
பம்பாய் திருவள்ளுவர் மன்றம்	[illegible]
நெய்வேலி சங்கீத சங்கம்	[illegible]
கருமுத்து தியாகராச செட்டியார் (பல பாங்கிகளிலிருந்து பெற்று)	25,000 [illegible]
மணியார்டர்கள் மூலம்	417.79
மொத்தம்	31,819 00
கழிவு : திருப்பிய தொகை	145.05
	31,673 95

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.